**ஜனவரி – 10**

# TNPSC துளிகள்

- ❖ சர்வதேச கிரிக்கெட் குழுமமானது சமீபத்தில் 105-வது உறுப்பினராக அமெரிக்காவை அறிவித்துள்ளது.
- ❖ 2030 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தப்படியாக உலகின் மூன்றாவது பெரிய நுகர்வோர் சந்தையாக இந்தியா திகழும் என உலக பொருளாதார மன்றத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.
- ❖ ஸ்டேண்டர்ட் சார்ட்டர்ட் வெளியிட்டுள்ள நீண்டகால கணிப்பு அறிக்கையின்படி, 2030 ஆம் ஆண்டில் இந்தியாவானது அமெரிக்காவை முந்தி உலகின் மிகப்பெரிய 2-வது பொருளாதாரமாகவும் சீனா முதலிடத்திலும் இருக்கும்.
- ❖ அசாமில் வசிக்கும் கோச் ராஜ் போங்ஷி, தாய் அஹோம், சுதியா, மடாக், மொரான் மற்றும் டீ ஆகிய இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ உத்திரப் பிரதேசத்தில் உள்ள தீனதயாள் கால்நடை பல்கலைக்கழகமானது ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் திட்டத்தின் கீழ் முதலாவது ஆடு கருத்தரிப்பு ஆய்வகத்தினை அமைக்க முன்மொழிந்துள்ளது.
  - ○ மேலும் இந்தப் பல்கலைக்கழகமானது சந்தைப்படுத்துதலுக்காக பிரதேஷிக் கூட்டுறவு பால்பொருட்கள் கூட்டமைப்புடன் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டுள்ளது.
- ❖ ஆண்டிற்கான வளர்ந்து வரும் ICC-ன் பெண் ஆட்டக்காரராக இங்கிலாந்து மகளிர் மட்டைப்பந்து அணியின் வீரரான சோபிக் எக்லெஸ்டோனும் ஆண்டிற்கான சிறந்த ICC-ன் மகளிர் ஒருநாள் ஆட்ட அணியின் தலைவராக நியூசிலாந்தின் வீரரான சூஸி பேட்ஸ்-ம் தேர்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# தமிழ்நாடு செய்திகள்


## போலீஸ் இ-ஐ செயலி

- ❖ பொதுமக்கள் போக்குவரத்து மீறல்களைப் பற்றி புகார் தெரிவிப்பதற்காகவும் அதனை சரிபார்ப்பதற்காகவும் கோயம்புத்தூரின் நகரப் போக்குவரத்து காவல் துறையினர் போலீஸ் இ-ஐ (Police-E-Eye) எனும் செயலியைத் தொடங்கியுள்ளனர்.
- ❖ இந்தச் செயலியானது ஏவியோன் இன்போடென் பி லிட்-ஆல் அதன் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ இதன்மூலம் விதிமீறல்களின் புகைப்படங்களை GPS உதவியுடன் நேரம், தேதி மற்றும் இடம் ஆகியவற்றுடன் அனுப்ப முடியும்.

# தேசியச் செய்திகள்

## வெப் வொண்டர் உமன் பிரச்சாரம்

- இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது #www:Web-WonderWomen' எனும் ஆன்லைன் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- சமூக ஊடகங்கள் வழியாக சமூக மாற்றத்திற்காக நேர்மறையான செயல்பாட்டு திட்டத்தினைக் கொண்டுள்ள தனித்துவமான மகளிரை அங்கீகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- ப்ரேக்துரு (Breakthrough) மற்றும் ட்விட்டர் இந்தியா ஆகியவை இந்த பிரச்சாரத்தின் பங்குதாரர்கள் ஆவர்.




## தொழில் தொடங்குவோரை ஊக்குவிக்க MSME-க்களின் முன்முயற்சி

- உலக வங்கியின் 2019க்கான தொழில் தொடங்குவதற்கு உகந்த தரவரிசைப் பட்டியலில் இந்தியாவானது 23 இடங்கள் முன்னேறி உலகளவில் 77-வது இடத்தில் உள்ளது.
- பல்வேறு குறிப்பிடத்தக்க டிஜிட்டல் தலையீடுகளானது இந்தியாவின் இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில் பெரும்பங்களிப்புகளை அளித்துள்ளன.
- தொழில் தொடங்குவதற்கு உகந்த தரவரிசையில் முன்னேற்றமடைவதற்கு இந்தியா MSME துறைகளில் சிறப்பு கவனம் செலுத்துவது முக்கிய தேவையாகும்.
- இதற்காக MSME-ஆனது கீழ்க்காணும் டிஜிட்டல் முன்முயற்சிகளை அறிவித்துள்ளன.
    - உத்யோக் ஆதார் மெமோரண்டம் – MSME-க்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ள சுய அறிவிப்பு வடிவம்.
    - MSME சமதான் தளம் – அரசால் தாமதமாக பணம் வழங்கப்படுவது குறித்த வழக்கைப் பதிவு செய்வதற்கான தளம்.
    - MSME சம்பந்த் தளம் - CPSE-க்கள் மூலம் MSME-க்களிலிருந்து பொது கொள்முதல் செய்யப்படுவதின் செயல்பாட்டினைக் கண்காணிக்கும் தளம்.
    - MSME சம்பர்க் தளம் – வேலை தேடுவோர்கள் பதிவு செய்வதற்கான டிஜிட்டல் தளம்.

## UDAN-3ன் கீழ் முதல் கடலில் தரையிறங்கும் விமானங்களை இயக்கும் முதல் தீவு

- உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகமானது UDAN-3 திட்டத்தின் கீழ் அந்தமான் தீவுகளில் கடலில் தரையிறங்கும் விமானங்களை இயக்க அனுமதியளித்துள்ளது.
- இதன்மூலம் கடலில் தரையிறங்கும் விமானங்களை இயக்கும் முதல் இந்திய தீவாக அந்தமான் ஆகியுள்ளது.
- கேம்பல் விரிகுடா, கார் நிகோபார் ஹேவ்லாக், ஹட்பே நெயில், லாங் தீவு மற்றும் திக்லிபூர் ஆகிய அந்தமான் தீவுகள் கடலில் தரையிறங்கும் விமானங்கள் மூலம் இணைக்கப்படும்.
- மாலத்தீவு மற்றும் மொரிஷியஸ் ஆகிய இடங்களில் பொதுவாக இயக்கப்படும் கடல் விமானங்களின் இயக்கமானது அரசின் லட்சிய பிராந்திய இணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## இந்திய வனப்பணி பெயர் மாற்றம்

- பணியாளர் நலன் மற்றும் பயிற்சித் துறையானது இந்திய வனப்பணியை (IFoS) இந்திய வனம் மற்றும் பழங்குடியினர் பணி (IFTS – Indian Forest and Tribal Service) என பெயர் மாற்றம் செய்ய முன்மொழிந்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது இந்திய வனப்பணியானது பழங்குடியினர் மீதும் வனவாசிகள் மீதும் அதிக கவனத்தினைக் கொண்டிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இது பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் உத்தரவினையடுத்து இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ராஷ்ட்ரிய கோகுல் மிஷன்

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகமானது குறிப்பிட்ட மற்றும் அறிவியல் முறையில் உள்நாட்டு மாட்டினங்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது
- இந்தத் திட்டமானது கீழ்க்காணும் 2 கூறுகளை உள்ளடக்கியது.
    - எருது போன்ற விலங்குகளின் இனப்பெருக்கத்திற்கான தேசிய திட்டம் - (National Programme for Bovine Breeding- NPBB)
    - எருது போன்ற விலங்குகளின் உற்பத்தி திறன் மீதான தேசிய திட்டம்- (National Mission on Bovine Productivity -NMBP)




# சர்வதேசச் செய்திகள்

## ஆட்கடத்தல் மீதான உலகளாவிய அறிக்கை

- போதைப் பொருட்கள் மற்றும் குற்றங்கள் மீதான ஐ.நா. அலுவலகமானது அண்மையில் ஆட்கடத்தல் மீதான உலகளாவிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி மொத்த கடத்தல்களில் 30% அளவில் குழந்தைகள் கடத்தப்படுகின்றனர். மேலும் சிறுவர்களை விட சிறுமிகள் அதிக அளவில் கடத்தப்படுகின்றனர்.
- இந்த அறிக்கையானது கடந்த 73 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2016 ஆம் ஆண்டில் ஐ.நாவின் நிறுவனங்களில் ஆட்கடத்தல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.
- பாலியல் சுரண்டல்களுக்காக கடத்துவது ஐரோப்பிய நாடுகளில் மிகவும் பரவலாக உள்ளது.
- ஆப்பிரிக்க துணை சஹாரா பகுதிகள் மற்றும் மத்திய கிழக்கு பகுதிகளின் கட்டாய தொழிலாளர் முறை சட்ட விரோதமான வர்த்தகத்திற்கு முக்கிய காரணியாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## அடையாளத் தகவல்களுக்கு RBI அனுமதி

- ரிசர்வ் வங்கியானது நாட்டில் டிஜிட்டல் பண வழங்கீட்டுச் சூழலியலின் பாதுகாப்பை மேம்படுத்த பற்று, கடன் மற்றும் முன்பணம் செலுத்தப்பட்ட அட்டைகளின் பரிவர்த்தனைகளுக்கு அடையாள தகவல் முறையை அனுமதித்துள்ளது.
- இந்த அடையாளத் தகவல் முறையானது 16 இலக்க கணக்கு எண், காலாவதி தேதி மற்றும் பாதுகாப்பு குறியீட்டு எண் ஆகிய முக்கியமான தகவல்களுக்கு கூடுதலான ஒரு பாதுகாப்பு அடுக்காக செயல்படுகிறது.
- மத்திய வங்கியானது விசா, மாஸ்டர் அட்டை மற்றும் இதர அட்டைத் திட்டங்களானது மூன்றாம் தரப்பு பணவழங்கீடு செயலிகளுக்கும் இந்த அடையாளத் தகவல்களை வழங்க அனுமதித்துள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உவர்ப்புத் தன்மை அதிகரிப்பால் கங்கை டால்பின்களுக்கு பாதிப்பு

- சங்கீதா மித்ரா (தேதிய பல்லுயிர் ஆணையம், சென்னை) மற்றும் மஹுவா ராய் சவுத்ரி (கடல்சார் உயிரியலாளர், கல்கத்தா) ஆகியோரின் 5 ஆண்டுக்கால ஆய்வின் அறிக்கையானது Journal of Threatened Taxa-ல் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த ஆய்வானது கங்கை நதி டால்பின்களின் வசிப்பிடத்தின் நீரில் உவர்ப்புத்தன்மை அதிகரித்து வருவது அவற்றிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கண்டறிந்துள்ளது.
- கங்கை நதி டால்பின்கள் மட்டுமே இந்தியாவில் எஞ்சியிருக்கும் நன்னீரில் வாழும் டால்பின் ஆகும்.
- கங்கை நதி டால்பின்களானது நேபாளம், இந்தியா மற்றும் வங்காள தேசம் ஆகிய நாடுகளின் கங்கை, பிரம்மபுத்திரா, மேக்னா மற்றும் கர்னா புலி ஆகிய ஆறுகளில் மட்டுமே வசிக்கின்றன.
- இந்தியாவின் தேசிய நீர்வாழ் விலங்கான கங்கை நதி டால்பின்கள் IUCN-ன் அச்சுறு நிலையில் உள்ள விலங்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் போலாவரம் திட்டம்

- ஆந்திரப்பிரதேசத்தின் போலாவரம் திட்டமானது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.



- இந்த திட்டமானது 24 மணி நேரத்தில் 34315.5மீ$^3$ கான்கீரிட்டை இடைநிறுத்தமில்லாமல் கொட்டி சாதனை படைத்துள்ளது.
- 21,580மீ$^3$ கான்கிரீட் கொட்டப்பட்ட அப்துல் வாஹத் பின் சாஹிப் திட்டத்தை முந்தி

இந்த திட்டமானது சாதனையைப் படைத்துள்ளது.

## ஜம்மு காஷ்மீர் மாநில சட்ட ஆணையம்

❖ ஜம்மு & காஷ்மீரின் சட்டத் துறையானது ஓய்வுபெற்ற நீதிபதி MK ஹனுஜுரா தலைமையிலான மாநில சட்ட ஆணையத்தினை 3 ஆண்டு காலத்திற்கு அமைத்துள்ளது.

**Functions of the Commission**

- It will identify redundant and obsolete laws that can be repealed and suggest measures for quick redress of public grievances
- It will examine the laws that affect the poor and carry out post-audit of socio-economic legislations
- It will ensure speedy clearance of arrears and reduction in costs and quick and economical disposal of cases

❖ இது தலைவர், இரண்டு முழுநேர உறுப்பினர்கள் மற்றும் இரண்டு பகுதி நேர உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

❖ சட்டம், நீதித்துறை மற்றும் பாராளுமன்ற விவகார செயலாளரான அச்ஹால் சேத்தி இந்த ஆணையத்தின் அலுவல் ரீதியான உறுப்பினராக இருப்பார்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## 2018 ஆம் ஆண்டிற்கான ஆப்பிரிக்க கூட்டமைப்பு கால்பந்து வீரர் விருது

❖ லிவர்புல்லின் முகமது சலாவிற்கு இரண்டாவது முறையாக 2018 ஆம் ஆண்டிற்கான ஆப்பிரிக்க கூட்டமைப்பு கால்பந்து வீரர் விருது செனகலில் வழங்கப்பட்டது.



❖ மேலும் இவர் 2018 டிசம்பரில் இரண்டாவது முறையாக ஆண்டின் சிறந்த BBC ஆப்பிரிக்கன் கால்பந்து வீரர் விருதினையும் பெற்றுள்ளார்.

❖ மற்ற விருது பெற்ற வீரர்களில் ஹவுஸ்டன் டாஷ் மற்றும் தென் ஆப்பிரிக்கா

அணியின் கால்பந்து வீரர் தேம்பி காட்லனா ஆண்டின் சிறந்த பெண் வீரராகவும் தேர்வு செய்யப்பட்டார்.

***ஆப்பிரிக்க கோப்பை போட்டியை நடத்தும் நாடு***

- 2019 ஆம் ஆண்டு 5-வது முறையாக ஆப்பிரிக்க கோப்பைப் போட்டியை எகிப்து நடத்தும் என ஆப்பிரிக்கா கால்பந்து கூட்டமைப்பின் செயற்குழுவானது அறிவித்துள்ளது.

- - - - - - - - - - - - - - -